III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 140/2023

Deposition of witness for the Petitioner /PW 1
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 07-03-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : E.Arulmariyan | Village | : |
| Father's Name | : Eruthayasami | Taluk | : |
| Age | : | Calling | : |

**முதல் விசாரணை**

நான் மனுவின் முதலாவது மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 20 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, ம.த.சா.1 முதல் 20 வரை ஆகும். எனவே மனுவில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் இரண்டு சக்கர வாகனத்தை எனது தகப்பனார் ஓட்ட எனது தாயார் பின் இருக்கையில் அமர்ந்து சென்றார். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் எனது தங்கையின் கணவர் ஜான்சன் புகார் கொடுத்தார். 09.08.2023 அன்று இரவு 10.45 மணியளவில் விபத்து நடைபெற்றது. 10.08.2023 அன்று புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் இரண்டு சக்கர வாகனத்தை சாலையிலுள்ள வேகத்தடையில் செல்லும்போது தடுமாறி விழுந்த

வகையில் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். எனது தகப்பனார் ஓட்டி சென்ற வாகனம் அவருக்கு சொந்தமானது. மனுவின் முதலாவது எதிர்மனுதாரர் எனது தகப்பனார். விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கில் எனது தகப்பனார் மீது குற்ற இறுதி அறிக்கை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விபத்திற்கு பின்னர் போலிசார் என்னையோ என் உடன்பிறந்தவர்களையோ எனது தகப்பனாரையோ விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. ம.த.சா.6 ல் முதலாம் எதிர்மனுதாரரும் எனது தாயாரும் வாரிசாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாரான முதலாம் எதிர்மனுதாரர் 02.02.2024 அன்று காலமானார். இதுவரை அவர் இறந்த காரணத்தினால் இம்மனுவில் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் அனைவருக்கும் திருமணம் ஆகி தத்தமது குடும்பத்துடன் தனியாக வசித்து வருகிறோம். எனது தாயார் இறக்கும் காலத்தில் அவர் எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் தனது கவனக்குறைவினால் வாகனம் வேகத்தடையில் ஏறி இறங்கும்போது கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. குற்றப்பத்திரிக்கையின் நகல் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் தவறு யார்மீது என்பது தெரியவந்திருக்கும் என்றும் அதை தாக்கல் செய்யாததினால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், ஆதலால் 2ம் எதிர்மனுமாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.